பிலே பின்தங்கிய பிரதேசமாக இருப்பதால், இங்கு சிமெண்ட் ஆலையை அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு ஏதாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது ஆலை அங்கு இல்லை. ஆகவே, அதை ஏற்று நடத்த முடியாது. புதிதாகத் தொடங்கப்படவேண்டும். சர்க்கரையைப் போலவே சிமெண்டு தென்னாட்டில், குறிப்பாக தமிழகத்தில் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு, இதனை விற்பதற்கு வெளிநாடுகளை, வெளி மாநிலங்களை, குறிப்பாக வட பகுதி மாநிலங்களை எதிர்பார்க்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் பூல் பிரைஸ், எங்கு விற்றாலும், ஒரே விலைக்கு விற்கவேண்டும் என்ற கருத்தை ஓரளவுக்கு இடைக் காலத்தில் மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. நமது ஆலைகளில் உற்பத்தி செய்யக்கூடிய சிமெண்டு விற்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, புதிதாகத் தொடங்கப்பட வேண்டுமென்றால், கனம் அங்கத்தினர் அவர்கள் அதற்குச் சிறந்த முயற்சி எடுத்து, தொழில் அதிபர் யாரையாவது தயார் செய்து கொண்டு வருவார்களேயானால், அதற்கு ஒத்துழைப்பு கொடுப்பது பற்றி யோசிக்கலாம்.

Central Board of Trade

* 17 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether representatives of (i) private sector from this State and (ii) the State Government have been included in the Central Board of Trade ; and

(*b*) if so, the grounds on which they were included ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) (i) "மத்திய வர்த்தக வாரியத்தின்" அரசு சார்பற்ற பிரதிநிதிகளாக நமது மாநிலத்திலிருந்து கீழ்க்கண்டவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(a) திரு. எம். ஏ. சிதம்பரம்.

(b) திரு. டி. சி. கோத்தாரி.

(c) திரு. பி. எஸ். லோகநாதன்.

(ii) வர்த்தக வாரியத்தில் மாநில அரசின் பிரதிநிதிகள் எவருமில்லை.

(இ) வர்த்தக வாரியத்தின் அமைப்பு, அவற்றை ஏற்படுத்தல் ஆகியவற்றை இந்திய அரசின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சு கவனித்துக் கொள்கிறது. மாநில அரசுக்கு அவை குறித்து எந்தத் தொடர்புமில்லை. அரசுச் சார்பற்ற பிரிதிநிதிகள் எக்காரணங்களால் அதில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவில்லை.